
# தீர்க்கதரிசனத்தின் தேவகதைகள்

## பாடம் 3: வரப்போகிற ராஜா

**2இராஜாக்கள் 11:1-21**

### நடந்த கதை . . .

யூதாவின் கொடிய ராணியான அத்தாலியாள் தன் தாய் யேசபேலைவிடக் கொடுமையானவள். தன் குமாரனான அகசியா மரித்ததும், அரசபதவிக்குரிய தன் பேரப்பிள்ளைகளை எல்லாம் கொன்றாள்; ராஜ்யத்தைத் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தாள். அகசியாவின் மகனாகிய யோவாசை அகசியாவின் சகோதரி யோசேபாள் களவாய் அத்தாலியாளுக்குத் தெரியாமல் பள்ளி அறையில் ஒளித்துவைத்தாள். இவளோடேகூட அவன் ஆறு வருஷம் கர்த்தருடைய ஆலயத்தில் ஒளித்துவைக்கப்பட்டிருந்தான்; அத்தாலியாள் தேசத்தின்மேல் ராஜ்யபாரம்பண்ணினாள். 2இராஜா 11:2,3.



அரசகுமாரன் உயிரோடிருந்ததும் தேவாலயத்தில் ஒளிக்கப்பட்டிருந்ததும் அந்த ஆறு வருடங்களில் ஒரு சிலருக்கே தெரியும். பிரதான ஆசாரியனாகிய யோய்தா சிறுவனாகிய யோவாசைத் தன் சொந்த மகன்போலவே நேசித்தார்; பயிற்றுவித்தார். இறுதியில், முதியவரான அந்த ஆசாரியர் நம்பிக்கையான படைத்தளபதிகளை இரகசியமாக வரவழைத்தார்; அகசியாவின் இளைய குமாரன் இன்னும் உயிரோடிருந்ததை அவர்களுக்குக் காண்பித்தார். வெள்ளிக்கிழமை சாயங்காலம் வரை காத்திருந்தார்கள்; ஓய்வுநாள் ஆராதனைக்காக தேவாலயத்திற்கு வந்த உண்மை விசுவாசிகளிடம் சிறுவனாகிய ராஜாவைக் காட்ட நினைத்தார்கள். நூற்றுக் கணக்கான வீரர்கள் காவல்காக்க, தாவீதின் சிங்காசனத்திற்கு உரியவனை யோய்தா அறிமுகப்படுத்தினார். மக்களுக்கு முதலில் திகைப்பாக இருந்தது; ஆனால் அரசகிரீடம் அவர் தலையில் சூட்டப்பட்டிருந்ததைக் கண்டதும், 'ராஜா வாழ்க' என்று ஆர்ப்பரித்து, கைகொட்டினார்கள். 2 இராஜா 11:12.

எக்காளச் சத்தத்தையும் மக்களின் ஆராவாரத்தையும் அத்தாலியாள் கேட்டபோது, ஆலயத்திற்கு ஓடிவந்தாள்; தன் கொடுங்கோல் ஆட்சிக்கு முடிவுகட்டப்பட்டதைக் கண்டாள். அன்று அவளும் அவளுடைய அபிமானிகளும் கொல்லப்பட்டார்கள்; யோவாஸிடம் ராஜ்யபாரம் ஒப்படைக்கப்பட்டது.

தாவீதின் குமாரனாகிய இன்னொருவரைப்பற்றி வேதாகமம் கூறுகிறது. தமக்குச் சொந்தமான தம் ராஜ்யத்தை அரசாளவும் துன்மார்க்கரை அழிக்கவும், எக்காளம் முழங்க, பரலோகத் தேவாலயத்திலிருந்து சீக்கிரத்தில் அவர் வெளியே வரப்போகிறார்.

## ஆராய்ச்சிப் பகுதி

கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வசனங்களை வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்புக.

### 1. பரலோக ஆலயத்திலிருந்து சீக்கிரம் வெளியே வரப்போகும் ராஜா யார்?

**வெளிப்படுத்தல் 14:14.** *வெண்மையான மேகத்தையும், அந்த மேகத்தின்மேல் மனுஷ ______________ கொப்பானவராய்த் தமது சிரசின்மேல் பொற்கிரீடத்தையுமுடைய ஒருவர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டேன்.*

### 2. இயேசு மறுபடியும் இரகசியமாக வரப்போகிறாரா?

**1 தெசலோனிக்கேயர் 4:16.** *கர்த்தர் தாமே ______________ பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்.*

**எரேமியா 25:30.** *கர்த்தர் உயரத்திலிருந்து ______________, தமது பரிசுத்த வாசஸ்தலத்திலிருந்து தம்முடைய சத்தத்தைக் காட்டி, தம்முடைய தாபரத்துக்கு விரோதமாய்க் கெர்ச்சிக்கவே கெர்ச்சித்து … ______________.*

**சங்கீதம் 50:3.** *நம்முடைய தேவன் வருவார், ______________; … அவரைச் சுற்றிலும் மகா புசல் கொந்தளிப்பாயிருக்கும்.*

**குறிப்பு:** கடுங்காற்றுதான் கொந்தளிப்பை ஏற்படுத்தும். இயேசுவின் இரண்டாம் வருகையின் ஆரவாரத்தை நாம் வருணிக்கவே முடியாது. எனவே, அது இரகசியமாக இருக்க வாய்ப்பே இல்லை.

### 3. இயேசு வரும்போது வேறு என்ன வெளிப்படையான காட்சிகளைக் காணலாம்?

**வெளிப்படுத்தல் 16:18.** *பூமி மிகவும் ______________, பூமியின்மேல் மனுஷர்கள் உண்டான நாள் முதற்கொண்டு அப்படிப்பட்ட பெரிய அதிர்ச்சி உண்டானதில்லை.*

### 4. இயேசு வரும்போது யாரெல்லாம் அவரைப் பார்ப்பார்கள்?

**மத்தேயு 24:30.** *அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதை பூமியிலுள்ள ______________ ______________ ______________ புலம்புவார்கள்.*

**வெளி 1:7.** *மேகங்களுடனே வருகிறார்; ______________ ______________ அவரைக் காணும்.*

**குறிப்பு:** இதைத் தவறாகப் புரிந்துகொள்ள வாய்ப்பே இல்லை. துன்மார்க்கரானாலும், நீதிமான்களானாலும் உயிரோடிருக்கிற ஒவ்வொருவரும் இயேசு இப்பூமிக்கு திரும்ப வருவதைக் காண்பார்கள். தேவ மக்கள் இரகசியமாகக் கூடுவார்கள் என்றோ, 'இயேசு இரகசியமாக வருவார்' என்றோ வேதாகமத்தில் சொல்லப்படவில்லை.

### 5. மேகங்கள்மேல் இயேசு வரும்போது அவரோடு யாரெல்லாம் இருப்பார்கள்?

**மத்தேயு 25:31.** *அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல ______________ ______________ வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார்.*

**குறிப்பு:** ஹைட்ரஜன் குண்டு வெடிப்பதால் உண்டாகும் வெளிச்சம்கூட, ஆண்டவரின் வருகையின் பிரகாசத்திற்குமுன் ஒன்றுமில்லாமல் இருக்கும். இயேசுவின் கல்லறையில் ஒரே ஒரு தூதனுடைய வெளிச்சம்தான், ரோம வீரர்கள் அனைவரையும் செத்தவர்கள்போல் தரையில் விழச் செய்தது. (மத் 28: 2–4). எனவே, இயேசுவின் இரண்டாம் வருகையில் பரலோக தூதர்கள் அனைவருடைய வெளிச்சமும் யார் கண்ணுக்கும் தப்ப வாய்ப்பே இல்லை. மேலும், இயேசுவின் மகிமையும் பிதாவின் மகிமையும்கூடச் சேர்ந்தால்எப்படி இருக்கும்! (லூக்கா 9:26). வானத்தின் ஒருமுனை தொடங்கி மறுமுனைமட்டும் செல்லும் மின்னல்போல இயேசுவின் இரண்டாம் வருகை இருக்கும். மத்தேயு 24:27.





### 6. இயேசுவுடைய வருகையின் மகிமை பூமியிலுள்ள துன்மார்க்கரை என்ன செய்யும்?

**2தெசலோனிக்கேயர் 1:7,8.** *தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ______________ செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்.*

**2தெசலோனிக்கேயர் 2:8.** *அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே ______________.*

### 7. மரித்துள்ள நீதிமான்கள் இயேசுவின் வருகையில் என்ன ஆவார்கள்?

**1தெசலோனிக்கேயர் 4:16.** *கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது ______________.*

### 8. அப்போது உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களுக்கும் உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களுக்கும் என்னவாகும்?

**1கொரிந்தியர் 15:52,53.** *மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் ______________. அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும்.*

**குறிப்பு:** இப்போதைக்கு, தேவனைத் தவிர அழியாமையுள்ளவர்கள் வேறு யாரும் கிடையாது. (1தீமோ 6:15,16). ஆனால், இயேசுவின் இரண்டாம் வருகையில் நீதிமான்களுக்கு அது இலவசஈவாக வழங்கப்படப்போகிறது. அவர்களுடைய சரீரங்களும் இயேசுவைப்போல் சாவாமை உள்ளவைகளாக, பரலோகத்திற்குரியவைகளாக மாறும். பிலிப்பியர் 3:20,21.

### 9. மறுரூபமாக்கப்படும் நீதிமான்கள் என்ன ஆவார்கள்?

**1தெசலோனிக்கேயர் 4:17.** *பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட (உயிர்த்தெழுப்பப்பட்ட பரிசுத்தவான்கள்) ஆகாயத்தில் ______________, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்.*

**குறிப்பு:** தேவனுடைய பரிசுத்தவான்கள் ஆண்டவரைச் சந்திக்கும்படி ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். இயேசு தம் இரண்டாம் வருகையில் பூமியைத் தொடப்போவதில்லை. எனவே, அநேகர் நினைக்கிறபடி அவர் பூமியில் தோன்றப்போவதில்லை. அவர் இரண்டாம் வருகை பூமியில் அல்ல, வானத்தில்தான் காணப்படும்.

### 10. தம்முடைய இரண்டாம் வருகை குறித்து இயேசு கொடுக்கும் முக்கிய எச்சரிப்பு என்ன?

**மத்தேயு 24:5.** *அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை ______________.*

**மத்தேயு 24:24,26.** *ஏனெனில், ______________ கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் ______________ செய்வார்கள். … இதோ, அறைவீட்டிற்குள் இருக்கிறார் என்று சொல்வார்களானால் ______________.*

**குறிப்பு:** கிறிஸ்து இரண்டாம் முறை வந்துவிட்டதுபோல, மகிமையான பிரசன்னத்தோடு சாத்தான் பூமியில் தோன்றுவான்; கோடிக்கணக்கானோரை வஞ்சிப்பான். ஆனால் தாம் இரண்டாம் முறை வரும்போது பூமியைத் தொடப்போவதில்லை என இயேசு எச்சரித்திருக்கிறார். மாறாக, அவர் ஆகாயத்திலேயே இருப்பார். சாத்தானின் பொய்யான ஜொலிப்பு பிரமாதமாக, அநேகர் அதைக் கண்டு ஏமாறும்விதத்தில் இருக்கும்.

### 11. வஞ்சிக்கப்படுவதிலிருந்து எது நீதிமான்களைக் காப்பாற்றும்?

**ஏசாயா 8:20.** வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும்; இந்த ____________________ படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை.

**குறிப்பு:** தேவமக்கள் வஞ்சிக்கப்படமாட்டார்கள். ஏனென்றால், இயேசு எப்படி வருவாரென்று தேவ வார்த்தையிலிருந்து அறிந்திருப்பார்கள். (அப் 17:11). வருகையானது வேதாகமம் சொல்வதற்கு மாறானதாக இருந்தால் அதை நம்பக்கூடாது; புறக்கணிக்கவேண்டும். இதைக் குறித்து முன்னமே இயேசு நம்மை எச்சரித்திருக்கிறார்.

**மத்தேயு 24:25.** இதோ, முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன்.

### 12. கள்ளத்தீர்க்கதரிசி ஒருவரைப் பார்க்கச்செல்லலாமா?

**மத்தேயு 24:26.** அதோ, வனாந்தரத்தில் இருக்கிறார் என்று சொல்வார்களானால், ____________________.

### 13. இயேசுவின் இரண்டாம் வருகை எப்போது இருக்கும்?

**மத்தேயு 24:36.** அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர ______________ ____________; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்.

**மத்தேயு 24:33.** அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள்காணும்போது, அவர் ____________________ வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்.

**குறிப்பு:** எப்போது இரண்டாம் வருகை இருக்கும் என்பது தேவனுக்குமாத்திரமே தெரியும். அதற்கு நாள் குறிப்பது வேதாகமத்திற்குப் புறம்பானது. அவருடைய வருகையின் அடையாளங்கள் நிறைவேறும்போது, அவர் வருகை சமீபித்துவிட்டதை நாம் அறியலாம். மத் 24:4–51; லூக்கா 21:8–33; 2 தீமோ 3:1–8.

### 14. இயேசுவின் வருகையின்போது தூதர்கள் என்ன செய்வார்கள்?

**மத்தேயு 24:31.** அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒருமுனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் ____________________.

**குறிப்பு:** உங்களைப் பாதுகாக்கும் தேவதூதன்தாம் (மத்தேயு 18:10), இயேசுவின் வருகையில் உங்களை வரவேற்கும் முதல் தூதனாக இருக்கமுடியும். என்ன ஒரு பாக்கியம்! அதனால்தான் இரண்டாம் வருகையை 'நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியம்' என்று வேதாகமம் அழைக் கிறது. தீத்து 2:13.

### 15. இயேசுவின் இரண்டாம் வருகை மிகவும் நெருங்கியுள்ள ஒரு காலத்தில் நாம் வாழ்கிறோம்; இந்த முக்கியமான, மகிமையான நிகழ்வை நினைத்து நாம் என்ன செய்யவேண்டும்?

**மத்தேயு 24:44.** நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ________________________.

### 16. இயேசுவின் வருகையின்போது மக்கள் எதன் அடிப்படையில் தங்களுக் கான பலனை அடைவார்கள்?

**வெளி 22:12.** இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய ____________ ____________ அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது.

### 17. இயேசு வரும்போது துன்மார்க்கர் என்ன சொல்வார்கள்?

**வெளிப்படுத்தல் 6:15–17.** பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான் களும், சேனைத்தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும் ... பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி, "நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக் குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள். அவரு டைய கோபாக்கினையின் மகாநாள் வந்துவிட்டது, ____________ ____________________?" என்றார்கள்.



**குறிப்பு:** பூமியானது மிகவும் குலுங்குகிற இந்த வேளையில், துன்மார்க்கர் பீதியடைவார்கள்; ராஜா வாகிய இயேசுவைச் சந்திப்பதைவிட பாறைகளும் மலைகளும் தங்கள்மேல் விழுந்து மூடினால் நல்லது என்று நினைப்பார்கள்

### 18. இயேசு வரும்போது நீதிமான்கள் என்ன சொல்வார்கள்?

**ஏசாயா 25:9.** இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம்; இவர் ____________ ____________________; ... இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம் என்று சொல்லப்படும்.

### 19. இயேசுவின் இரண்டாம் வருகையின் முக்கிய நோக்கம் என்ன?

**யோவான் 14:3.** நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து ____________ என்னிடத்தில் ________________________.

**குறிப்பு:** இயேசு தம் பிள்ளைகளுக்காக ஆயத்தம்செய்துள்ள மகிமையான வீட்டிற்கு அவர்களை அழைத்துச் செல்லவே மீண்டும் வருகிறார். அதன்பிறகு கண்ணீரும், கவலைகளும், மன வேதனைகளும், வியாதியும் இருக்கப் போவதில்லை. மாறாக, சொல்லமுடியாத சந்தோஷமும் சமாதானமும் என்றென்றும் இருக்கும்.

## நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

**இயேசு மேகங்களின்மேல் சீக்கிரத்தில் வரப்போகிறார். அவரைச் சந்திக்க இப்போதே உங்களை ஆயத்தப்படுத்துவீர்களா?**

**பதில்:** ________________________________________

## துணைப்பகுதி

***மேலும் படிப்பதற்கான கூடுதல் தகவல்கள் இந்தப் பகுதியில் உள்ளன.***

இயேசுவின் வருகை இரகசியமானது என்கிற கருத்தை 8 அனுமானங்களை அடிப்படையாக வைத்து நம்புகிறார்கள்; உண்மை என்னவென்று ஆராயாமலேயே பலர் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். நமக்கு இருக்கிற ஒரே பாதுகாப்பு தினமும் வேதாகமத்தை ஆராய்ந்து பார்ப்பது தான். அப் 17:11. இரகசிய வருகைபற்றிய அந்த 8 அனுமானங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### தவறான எட்டு அனுமானங்கள்

1. இரகசிய வருகை அமைதியாக இருக்கும். **இது தவறு.**
2. இரகசிய வருகை கண்ணுக்குப் புலப்படாதது. **இது தவறு.**
3. இரகசிய வருகையின்பிறகு துன்மார்க்கர் உயிரோடு இருப்பார்கள். **இது தவறு.**
4. அப்போது, உபத்திரவத்திலிருந்து தப்பும்படி நீதிமான்களை தேவன் அழைத்துச் செல்கிறார். **இது தவறு.**
5. இயேசுவின் இரண்டாம் வருகை இரண்டு கட்டமாக இருக்கும். **இது தவறு.**
   அ) இரகசிய வருகை
   ஆ) பொதுவான மகிமையான வருகை.
6. இந்த இரண்டு வருகைக்கும் இடையே ஏழு வருட இடைவெளி இருக்கும். **இது தவறு.**
7. அந்திக்கிறிஸ்து வெளிப்படுவதற்குமுன் இரகசிய வருகை இருக்கும்; அவன் வெளிப்பட்டபின் உபத்திரவத்தைக் கொண்டுவருவான். **இது தவறு.**
8. அந்தக் காலக்கட்டமானது, துன்மார்க்கர் மனம்மாறி, கிறிஸ்துவைச் சேவிப்பதற்கு ஒரு இரண்டாந்தருணமாக இருக்கும். **இது தவறு.**



## சில விளக்கங்கள்

இந்த எட்டு அனுமானங்களையும் விலாவாரியாக இங்கு ஆராயப்போவதில்லை; ஒவ்வொன்றையும் சுருக்கமாகப் பார்ப்போம். முதல் இரண்டையும் இந்தப் பாடத்தில் ஏற்கனவே படித்துவிட்டோம். ஆனாலும், மீண்டும் அவற்றைப் பார்ப்போம். சில ஆச்சரியங்கள் உங்களுக்குக் காத்திருக்கின்றன!

1. இரண்டாம் வருகை அமைதியாக இருக்காது; அதிக ஆரவாரத்தோடு இருக்கும். '**ஆரவாரத்தோடு**ம் பிரதான தூதனுடைய **சத்தத்தோடும்**, **தேவஎக்காளத்தோடு**ம்' இயேசு வருவார் என்று வேதாகமம் சொல்கிறது. 1தெச 4:16. 'நம்முடைய தேவன் வருவார், மவுனமாயிரார்; அவருக்குமுன் அக்கினி பட்சிக்கும்; அவரைச் சுற்றிலும் மகா புசல் **கொந்தளிப்பாயிருக்கும்**' என்று தாவீது சொல்கிறார். சங்கீதம் 50:3. 'கர்த்தர் உயரத்திலிருந்து கெர்ச்சித்து, கெர்ச்சிக்கவே கெர்ச்சித்து, ஆர்ப்பரிப்பார். **ஆரவாரம்** பூமியின் கடையாந்தரமட்டும் போய் எட்டும்' என்று எரேமியா சொல்கிறார். எரேமியா 25:30,31. இரகசியமாக இருப்பதற்கு வாய்ப்பே இல்லை. இயேசு வினுடைய வருகையின் சத்தம் பூமிமுழுவதிலும் கேட்கும். இயேசு வரும்போது நீங்கள் உயிரோடிருந்தால் உங்களுக்கும் அந்தச் சத்தம் கேட்கும். அப்போது நடக்கும் பேரழிவின் சத்தம் காதைப் பிளக்கும்.
2. இரண்டாம் வருகை கண்ணுக்குப் புலப்படாமல் இருக்காது, எல்லாரும் அதைப் பார்க்கமுடியும். தூதர்கள் அனைவரும் இயேசுவோடு வருவார்கள். மத்தேயு 25:31. இயேசு உயிர்த்தெழுந்த கல்லறையினிடத்தில் ஒரு தூதன் தோன்றினான்; அவனுடைய மகிமையின் பிரகாசத்தால் அங்கிருந்த ரோம வீரர்கள் செத்தவர்கள் போல விழுந்தார்கள். மத்தேயு 28:2-4. அப்படியானால், பரலோகம் முழுவதிலு முள்ள தூதர்களின் பிரகாசம் என்னவாயிருக்கும்! தூதர்களின் பிரகாசம்போக, இயேசுவினுடைய மகிமையின் பிரகாசமும் (மத்தேயு 25:31) அவருடைய பிதாவின் மகிமையின் பிரகாசமும் சேர்ந்திருக்கும். மத் 16:27. ஈடு இணையற்ற பிரகாசத் தோடு மகிமை விளங்கும். 'மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் **பிரகாசிக்கிறது போல**, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்' என்று இயேசு சொன்னார். மத்தேயு 24:27. வருகை இரகசியமாக இருக்குமென்று கற்பனையில் கூட நினைக்கமுடியாது. 'இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் **காணும்**' என்று வேதாகமம் சந்தேகத்திற்கு இடமின்றி சொல்லியிருக் கிறது. வெளி 1:7. இயேசுவின் இரண்டாம் வருகையின் போது நீங்கள் உயிரோடி ருந்தால், அவர் வருகையைக் காண்பது நிச்சயம்.
3. இரண்டாம் வருகையில் துன்மார்க்கர் உயிரோடு விடப்படுவார்கள் என்பது உண்மையல்ல. ஆண்டவருடைய வருகையில் அவர்கள் சங்கரிக்கப்படுவார்கள். (ஏசாயா 11:4; மல்கியா 4:1; 2தெசலோனிக்கேயர் 2:8).
4. நீதிமான்களை உபத்திரவத்திலிருந்து தேவன் நீக்கமாட்டார்; மாறாக, அதிலிருந்து பாதுகாப்பார். சங்கீதம் 91:5-12.
5. இரகசிய வருகை, எல்லாரும் பார்க்கும்படியான பொதுவான வருகை என்று கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இரண்டு கட்டமாக இருக்கப்போவதில்லை. இரண்டாம் வருகை ஒரே தரம்தான் இருக்கும்; பூமியில் உயிரோடிருக்கும் அனைவரும் அதைக் காணலாம். இரண்டாம் வருகை இரண்டு கட்டமாக இருக்குமென்று வேதாகமத்தில் எங்கும் சொல்லப்படவே இல்லை.
6. இரகசிய வருகை உண்டென்று சொல்கிறவர்கள் இரண்டாம் வருகையின் இரண்டு காலக்கட்டங்களுக்கும் இடையே ஏழு வருட இடைவெளி இருக்குமென்று சொல் கிறார்கள். வேதாகமம் அப்படிச் சொல்லவில்லை.
7. இயேசுவின் இரண்டாம் வருகை நடந்ததிலிருந்து மூன்றரை வருடங்களுக்குப்பிறகு அந்திக்கிறிஸ்து தோன்றுவான் என்பது உண்மையல்ல; காலம்காலமாக அவன் செயல்பட்டுக்கொண்டேதான் வருகிறான். 1யோவான் 4:3; தன் கொடிய கிரியை களை இன்றும் தொடர்கிறான்.
8. இரண்டாம் வருகைக்குப்பின் துன்மார்க்கர் மனந்திரும்ப இரண்டாம் தருணம் இருக்காது. பாவிகள் அனைவரும் இரண்டாம் வருகையில் அழிக்கப்படுவார்கள். இயேசுவின் இரண்டாம் வருகைக்குப் பின்னர் யாருக்குமே வாய்ப்பு இல்லை.

**LMN Kakkum Karangal**
35, Chethupakkam
Thamarai Pakkam Post,
Thiruvallur, Chennai 601103
Tel: +91-9444841268
lmnkakkumkarangal@gmail.com